**தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்,**
**உசிலம்பட்டி கிளை,**
**கதவு எண்: 93, மதுரை மெயின் ரோடு,**
**உசிலம்பட்டி-625532.**
**தொலைபேசி: 04552 - 251142, 252142**
**செல்: 98422-52142**
**CIN No: L65110TN1921PLC001908**

Tamilnad Mercantile Bank Ltd
Be a step ahead in life

**20.07.2026**

**M/s.P.M.T.Jawahar Agro Foods & Co,** **கடன்தாரர்**
**உரிமையாளர் திரு.J.வினோபா**
கதவு எண்: 186, சங்கர் ரைஸ் மில், மதுரை ரோடு, உசிலம்பட்டி - 625532

**மற்றொரு முகவரி:**
கதவு எண் : 5-13A, வார்டு எண் : 15, மாயாண்டி தேவர் தெரு, கீழப்புதூர், உசிலம்பட்டி - 625532

**திரு.J.வினோபா த/பெ திரு.M.ஜவஹர்** **உரிமையாளர்**
கதவு எண் : 5-13A, வார்டு எண் : 15, மாயாண்டி தேவர் தெரு, கீழப்புதூர், உசிலம்பட்டி - 625532

**திரு.M.ஜவஹர் த/பெ திரு.முத்துமணி தேவர்,** **ஜாமீன்தாரர் / அடமானதாரர்**
கதவு எண் : 5-13A, வார்டு எண் : 15, மாயாண்டி தேவர் தெரு, கீழப்புதூர், உசிலம்பட்டி - 625532

**ஏல விற்பனை அறிவிப்பு**

**2002-**ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிசொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் **8(6)** மற்றும் **9(1) -**ன் கீழ் வங்கியிடம் அடமானத்தில் உள்ள அசையா சொத்தின் விற்பனை**:**

இதனால் பொதுமக்கள் மற்றும் **கடன்தாரர் M/s.P.M.T.Jawahar Agro Foods & Co, உரிமையாளர் திரு.J.வினோபா த/பெ திரு.M.ஜவஹர் மற்றும் ஜாமீன்தாரர் / அடமானதாரர் திரு.M.ஜவஹர் த/பெ திரு.முத்துமணி தேவர்** அறிவிப்பது என்னவென்றால் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் **உசிலம்பட்டி** கிளையில் அடமானமாக வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்து மேற்படி வங்கியின் மதுரை மண்டலத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்ட "எங்குள்ளதோ உள்ளபடி" "என்ன உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி" எனும் அடிப்படையில் எங்களது தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, உசிலம்பட்டி கிளைக்கு வரவேண்டிய பாக்கி தொகை **ரூ.1,52,25,911.39 (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தி இரண்டு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து பதினொன்று மற்றும் பைசா முப்பத்தி ஒன்பது மட்டும்)-யும் 30.06.2026** வரை வட்டி மற்றும் செலவு தொகையை சேர்த்து வசூல் செய்வதற்காக **12.08.2026** அன்று பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

| சொத்து எண் | ஏல நிர்ணயத் தொகை | முன்வைப்புத் தொகை (EMD) |
|---|---|---|
| 1 | ரூ.28,50,000/- | ரூ.2,85,000/- |
| 2 | ரூ.28,00,000/- | ரூ.2,80,000/- |

**ஏலவிபரம்**

மேலே சொல்லப்பட்டுள்ள நபர் 30.06.2026 வரை செலுத்த வேண்டிய பாக்கித்தொகை **ரூ.1,52,25,911.39 (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தி இரண்டு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து பதினொன்று மற்றும் பைசா முப்பத்தி ஒன்பது மட்டும்)-**யும் மற்றும் அதன் பின்வரும் வட்டி, செலவுத் தொகைக்காகவும் சேர்த்து கீழே குறிப்பிட்டுள்ள சொத்து **12.08.2026** அன்று பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்

| | |
|---|---|
| ஏலம் நடைபெறும் இடம்: | தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், உசிலம்பட்டி கிளை,<br>கதவு எண்: 93, மதுரை மெயின் ரோடு, உசிலம்பட்டி-625532.<br>தொலைபேசி: 04552 - 251142, 252142<br>செல்: 98422-52142 & 98421 45637 |
| ஏல நிர்ணயத்தொகை | சொத்து எண். 1 - ரூ.28,50,000/-<br>சொத்து எண். 2 - ரூ.28,00,000/- |
| ஏலம் நடைபெறும் தேதியும், நேரமும்: | சொத்து எண். 1 -- 12.08.2026 & பிற்பகல் 12.30 மணி<br>சொத்து எண். 2 -- 12.08.2026 & பிற்பகல் 01.30 மணி<br>(புதன்கிழமை) |

## <u>அசையா சொத்தின் விபரம்</u>

### <u>சொத்து எண்: 1</u>

**<u>ஷெட்யூல் எண்:1</u>**

மதுரை மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், உசிலம்பட்டி துணை பதிவு மாவட்டம், உசிலம்பட்டி டவுன், மதுரை - தேனி மெயின் ரோடு, பழைய ரீ சர்வே எண் : 181/1, புதிய UDR சர்வே எண் : 181/1A2A, T.S.எண்: 100, நகராட்சி வார்டு எண் : 14, மாயாண்டி தேவர் தெருவில் பிளாக் எண் : 37-ல் அமைந்துள்ள 1313 சதுரடி நிலம் (பத்திரத்தின் படி) (1194 சதுரடி நிலம் - பட்டாவின் படி) மற்றும் சகலமும்

**<u>எல்லை:</u>**

வடக்கு : நீலாவதிக்கு சொந்தமான வீடு
தெற்கு : ஜவஹர்க்கு சொந்தமான நிலம்
கிழக்கு : தெற்கு வடக்கு மாயாண்டி தேவர் தெரு
மேற்கு : சிட்டம்மாள் வீடும் & ஒச்சம்மாள்க்கு சொந்தமான நிலம்

இதற்குள் கிழமேலடி வடபுரம் 34 1/2 அடி, தென்புறம் 36 அடி, தென்வடலடி மேல்புறமும், கிழ்புறமும் 37 1/4 அடி க்கு 1313 சதுரடியுள்ள நிலம்.

மேற்படி சொத்து திரு.M.ஜவஹர் த/பெ திரு.முத்துமணி தேவர் அவர்களுடையது

**<u>ஷெட்யூல் எண்:2</u>**

மதுரை மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், உசிலம்பட்டி துணை பதிவு மாவட்டம், உசிலம்பட்டி டவுன், மதுரை - தேனி மெயின் ரோடு, பழைய ரீ சர்வே எண் : 181/1, புதிய UDR சர்வே எண் : 181/1A2A, T.S.எண்: 101, நகராட்சி வார்டு எண் : 14, பிளாக் எண் : 37-ல் அமைந்துள்ள 677.50 சதுரடி நிலம் (பத்திரத்தின் படி) (651 சதுரடி நிலம் - பட்டாவின் படி) மற்றும் சகலமும்

**<u>எல்லை:</u>**

வடக்கு : பொன்னுசாமிக்கு சொந்தமான முந்தைய சொத்து தற்போது சொத்து எண் -ஷெட்யூல் 3
தெற்கு : சர்வே எண் :181/1A2 ல் உள்ள சீனியம்மாள்க்கு சொந்தமான காலி நிலம்
கிழக்கு : வடக்கு தெற்கு தெரு
மேற்கு : மூக்கண் மற்றும் அவரது மனைவி சௌதாமணிக்கு சொந்தமான வீடு மற்றும் சர்வே எண் :181/1A2 ல் உள்ள தையல்காரர் மாயீக்கு சொந்தமான காலி நிலம்

இதற்குள் கிழமேலடி வடபுரம் 34 1/4 அடி, தென்புறம் 33 1/2 அடி, தென்வடலடி கிழ்புறம் 20 1/2 அடி, மேல்புறம் 19 1/2 அடி க்கு 677 1/2 சதுரடியுள்ள நிலம்.

மேற்படி சொத்து திரு.M.ஜவஹர் த/பெ திரு.முத்துமணி தேவர் அவர்களுடையது

**<u>ஷெட்யூல் எண்:3</u>**

மதுரை மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், உசிலம்பட்டி துணை பதிவு மாவட்டம், உசிலம்பட்டி டவுன் பழைய ரீ சர்வே எண் : 181/1, புதிய UDR சர்வே எண் : 181/1A2A, T.S.எண்: 102, (மாயாண்டி தேவர் தெரு) நகராட்சி வார்டு எண் : 14, பிளாக் எண் : 37-ல் அமைந்துள்ள 490 சதுரடி நிலம் மற்றும் சகலமும்

**<u>எல்லை:</u>**

வடக்கு : பஸ்காரம்பட்டி பாண்டிக்கு சொந்தமான சொத்து தற்போது M.ஜவஹர் அவர்களின் சொத்து
தெற்கு : கதிரேசனுக்கு சொந்தமான காலி நிலம் தற்போது சொத்து எண் - ஷெட்யூல் 2
கிழக்கு : வடக்கு தெற்கு தெரு
மேற்கு : சௌதாவுக்கு சொந்தமான வீடு

இதற்குள் கிழமேலடி 28 அடி, தென்வடலடி 17 1/2 அடிக்கு 490 சதுரடியுள்ள நிலம்.

மேற்படி சொத்து திரு.M.ஜவஹர் த/பெ திரு.முத்துமணி தேவர் அவர்களுடையது

### <u>சொத்து எண்: 2</u>

மதுரை மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், உசிலம்பட்டி துணை பதிவு மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, உசிலம்பட்டி கிராமம், பட்டா எண்.1544, R.S.எண்.176/5, ஹெக்டேர் 0.18.5க்கு செண்ட் 46ல் மேல்புரம் செண்ட் 23, தற்போது உசிலம்பட்டி நகராட்சி எல்லைக்குள், தற்போதைய R.S.எண்.176/5Aக்கு T.S.எண்.17/8, பிளாக் எண்.36, ஹெக்டேர் 0.09.5 க்கு செண்ட் 23 சதுரடி நிலம் மற்றும் சகலமும்

**<u>எல்லை பத்திரத்தின் படி:</u>**

வடக்கு : பொதுப் பாதை
தெற்கு : ராஜாக்கானி வகையராக்கு சொந்தமான இடம்
கிழக்கு : அய்யர்காளைக்கு சொந்தமான சொத்து
மேற்கு : பொதுப் பாதை மற்றும் ஊரணிக் கரை

மேற்படி சொத்து திரு.M.ஜவஹர் த/பெ திரு.முத்துமணி தேவர் அவர்களுடையது

# <u>நிபந்தனைகள்:</u>

1. விருப்பமுள்ள விலைப்புள்ளிதாரர்கள் விலைப்புள்ளி படிவம் மற்றும் முன்வைப்பு தொகையினை கேட்பு காசோலையாக தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், என்கிற பெயரில் **சொத்து எண்.1க்கு 12.08.2026 அன்று** பிற்பகல் **12.00 மணிக்குள்** அல்லது அதற்கு முன்பு **உசிலம்பட்டி** கிளையில் சமர்ப்பிக்க வேண்டும் மற்றும் **சொத்து எண்.2க்கு 12.08.2026 அன்று பிற்பகல் 01.00 மணிக்குள்** அல்லது அதற்கு முன்பு **உசிலம்பட்டி** கிளையில் சமர்ப்பிக்க வேண்டும் (கேட்பு காசோலை வைத்திருப்பவரே விருப்பமுள்ள விலைபுள்ளிதாரர் ஆவார்).

2. ஏலத்தில் பங்கு பெற விரும்புவர்கள் சொத்துக்களை பார்வையிட்டு மற்றும் திருப்தி அடைந்த பிறகு சொத்துக்கள் சம்மந்தமான ஆவணங்களுக்கு **உசிலம்பட்டி** கிளை மேலாளரை காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை ஏல தேசிக்கு முன்பாக அணுகவும் தொலைபேசி எண்: 98422 எ 52142 & 98421 45637, 04552 - 51142 & 252142.

3. ஏலம் எடுத்த நபர்கள் ஏலம் எடுத்தவுடன் ஏல தொகையில் 25% தொகையை (EMD சேர்த்து) உடனடியாக அல்லது மறு நாள் செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில் வைப்பீட்டு தொகை திரும்ப தரப்பட பாட்டாது மற்றும் வைப்பீட்டு தொகை முழுவதுமாக இழக்க நேரிடும் மற்றும் இந்த சொத்து பொது ஏலம் மூலம் மறுவிற்பனை செய்யப்படும்.

4. ஏலத்தில் வெற்றி பெற்றவர் ஏல தொகையில் மீதம் உள்ள 75% தொகையை விற்பனை முடிந்த 15 நாட்களுக்குள் அல்லது அங்கீகாரம் பெற்ற அதிகாரி உடன் ஏற்ப்பட்ட உடன்படிக்கை அல்லது விரிவாக்கப்பட்ட கால அளவிற்குள் செலுத்த வேண்டும். ஏலத்தில் வெற்றி பெற்றவர் குறிப்பிட்ட கால அளவிற்குள் மீதமுள்ள தொகையை செலுத்த தவறினால் செக்யூரிட்டி இண்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) விதி 2002 (9) துணை விதி (5)- ன் படி வைப்பீட்டு தொகை திருப்ப தரப்படமாட்டாது. மேலும் சொத்து மறுஏலத்தில் விற்பனை செய்யப்படுவதுடன் முழு ஏல தொகை செலுத்தாத நபர் மேற்படி சொத்தில் எந்த வித கோரிக்கையையும் பெற தகுதியற்றவர் ஆகிறார்.

5. SARFAESI சட்டத்தின் கீழ் ஏலத்தில் பங்கு கொள்ள கட்டிய வைப்பீட்டிற்கு கண்டிப்பாக வட்டி தாப்படமாட்டாது.

6. அங்கீகாரம் பெற்ற அதிகாரி அறிந்தவகையில் மற்றும் தெரிந்த தகவல்களின் படி, ஏலம் விடும் சொத்தின் பெயரில் எந்த வில்லங்கமும் இல்லை. விற்பனைக்காக உள்ள சொத்தின் மீது ஏதேனும் கட்டணங்கள், பாத்தியதைகள், வில்லங்கங்கள், சொத்து வரி அல்லது அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைகள் இருந்தால் அதற்கு அங்கீகாரம் பெற்ற அதிகாரி பொறுப்பேர்க்கமாட்டார்.

7. ஏலம் எடுக்கும் நபர் சட்டத்தின் படி பொருந்தக்கூடிய பதிவுக்கட்டணம், முத்திரை கட்டணம் போன்ற செலவுகளை அவரே ஏற்று கொள்ள வேண்டியது.

8. அங்கீகாரம் பெற்ற அதிகாரிக்கு எந்த காரணமும் கூறாமல் ஏலத்தை ஏற்று கொள்ளவோ/ நிராகரிக்கவோ/ மாற்றி வைக்கவோ அல்லது ரத்து செய்ய முழு அதிகாரம் உண்டு. விருப்பமுள்ள விலைப்புள்ளிதாரரின் ஏலப்படிவம் ஒழுங்காக இல்லாவிடில் அதை நிராகரிக்க அங்கீகாரம் பெற்ற அதிகாரிக்கு உரிமை உண்டு.

9. ஏலம் விற்பனைக்கான சொத்துக்கள் மேற்படி நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச விலைக்கு குறைவாக விற்கப்படமாட்டாது. மேற்படி சொத்துக்கள் "உள்ளது. உள்ளபடி நிலையில்" விடப்படும்.

10. ஏலம் கேட்பவர்கள் தங்களது ஒரிஜினல் அடையாள அட்டையான அதவாது ஆதார் அட்டை, பாஸ்போர்ட், டிரைவிங் லைசென்ஸ், ரேஷன் கார்டு, வாக்காளர் அட்டை மற்றும் பான் கார்டு (Pan card) ஏதாவது ஒன்றை ஏலத்தில்l கலந்து கொள்ளும்போது கொண்டு வர வேண்டும்.

11. விற்பனை சான்றிதழ் ஏலம் எடுத்தவர் பெயரில் மட்டுமே பதிவு செய்து கொடுக்கப்படும் வேறு நபர்கள் பெயரில் கண்டிப்பாக கொடுக்கப்பட மாட்டாது. விற்பனை பத்திரத்தை பதிவு செய்ய பத்திர கட்டணம், முத்திரை கட்டணம் மற்றும் அதற்கு தொடர்புடைய பிற அரசாங்க கட்டணங்கள், வரி முதலியவற்றை ஏலம் எடுத்த நபரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

12. ஏலத்தில் வெற்றி பெற்றவர் / கொள்முதல்தாரர் அவர்களுக்கு வருமானவரி சட்டம் 1961, பிரிவு 194 1A-ன் படி விற்பனை விலையில் 1% TDS கழித்து செலுத்த வேண்டும் மற்றும் அதனை செலுத்தியதற்கான படிவம் 26 QB உடன் ரசீது மற்றும் TDS அசல் சான்றிதழை வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். (50.00 லட்சத்திற்கு மேல் உள்ள சொத்திற்கு)

13. மேலும் இந்த விற்பனை அறிவிப்பு www.tmb.bank.in என்ற இணையதளத்தில் பதிவேற்றும் / பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இடம் : மதுரை
தேதி : 20.07.2026

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,**
**தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட் ,**
**மண்டல அலுவலகம், மதுரை.**
**[உசிலம்பட்டி கிளைக்காக]**